www.Padasalai.Net www.CBSEtips.in

# இரண்டாம் இடைப்பருவ பொதுத்தேர்வு - 2019

V

## ஒன்பதாம் வகுப்பு

பதிவு எண் :

நேரம்: 2.30 மணி

## தமிழ்

மதிப்பெண்கள்: 100

பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்:** 15 x 1 = 15

1. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?
   அ) தேசிய திறனறித் தேர்வு ஆ) ஊரகத் திறனறித் தேர்வு
   இ) தேசிய திறனறி, கல்வி உதவித்தொகை தேர்வு ஈ) மூன்றும் சரி
2. ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
   இரண்டறிவதுவே அதனொடு நாவே – *இவ்வடிகளில் அதனொடு என்பது எதைக் குறிக்கிறது?*
   அ) நுகர்தல் ஆ) தொடு உணர்வு இ) கேட்டல் ஈ) காணல்
3. பின்வரும் தொடர்களைப் படித்து 'நான்' யார் என்று கண்டுபிடிக்க.
   அறிவியல் வாகனத்தில் நிறுத்தப்படுவேன்
   எல்லாக் கோளிலும் ஏற்றப்படுவேன்
   இளையவர் கூட்டம் என்னை ஏந்தி நடப்பர்
   அ) இணையம் ஆ) தமிழ் இ) கணினி ஈ) ஏவுகணை
4. கவிஞர் வைரமுத்துவுக்கு சாகித்திய அகாதெமி விருதைப் பெற்றுத்தந்த புதினம் ______.
   அ) குடும்ப விளக்கு ஆ) சிறுபஞ்சமூலம் இ) கள்ளிக்காட்டு இதிகாசம் ஈ) பாண்டியன் பரிசு
5. விளித்தொடரில் வல்லினம் மிகாது என்னும் விதிக்கு பொருத்தமான சான்றை கண்டுபிடி.
   அ) அந்தப்பக்கம் ஆ) கிளி பேசும் இ) பார்த்த பையன் ஈ) மகளே தா
6. பார் பார், சல சல - இச்சொற்களுக்குப் பொருத்தமான வல்லினம் மிகா இடங்களுக்கான விதியைக் கண்டுபிடி.
   அ) உம்மைத் தொகையில் வல்லினம் மிகாது ஆ) வினைத்தொகையில் வல்லினம் மிகாது
   இ) பெயரெச்சத்தில் வல்லினம் மிகாது
   ஈ) அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி ஆகியவற்றில் வல்லினம் மிகாது
7. தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் ______. அ) டாக்டர் முத்துலெட்சுமி
   ஆ) பண்டித ராமபாய் இ) மூவலூர் இராமாமிர்தம் ஈ) ஐடாஸ் சோபியா ஸ்கட்டர்
8. பாரதிதாசனின் 'பிசிராந்தையார்' என்னும் நாடக நூலுக்கு வழங்கப்பட்ட விருது ______.
   அ) பத்மபூஷன் ஆ) சாகித்திய அகாதெமி இ) பாரத ரத்னா ஈ) கலைமாமணி
9. சிறுபஞ்சமூலம் ______ நூல்களுள் ஒன்று.
   அ) பத்துப்பாட்டு ஆ) எட்டுத்தொகை இ) பதினெண்மேற்கணக்கு ஈ) பதினெண்கீழ்க்கணக்கு
10. வினாப் பொருளில் வரும் இடைச்சொல் ______.
    அ) உம் ஆ) தான் இ) ஆ ஈ) ஏ
11. பூவாது காய்க்கும், மலர்க்கை - அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?
    அ) பெயரெச்சம், உவமைத்தொகை ஆ) எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்
    இ) வினையெச்சம், உவமை ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை

*பாடலைப்படித்து பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக:*

பூவாது காய்க்கும் மரம் உள; நன்று அறிவார்,
மூவாது மூத்தவர், நூல் வல்லார்; தாவா,
விதையாமை நாறுவ வித்து உள; மேதைக்கு
உரையாமை செல்லும் உணர்வு

12. இப்பாடலின் ஆசிரியர்
    அ) காரியாசன் ஆ) பாரதிதாசன் இ) வைரமுத்து ஈ) பிசிராந்தையார்
13. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்
    அ) குடும்ப விளக்கு ஆ) சிறுபஞ்சமூலம் இ) உயிர்வகை ஈ) புறநானூறு

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

14. 'பூவாது காய்க்கும் மரம்' - இத்தொடரின் பொருள்
அ) பூத்துக் காய்க்கும் மரம் ஆ) வாடாமல் காய்க்கும் மரம்
இ) பட்ட மரம் ஈ) பூக்காமல் காய்க்கும் மரம்

15. பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைச் சொற்களைக் குறிப்பிடுக. அ) பூவாது, மூவாது
ஆ) விதையாமை, உரையாமை இ) காய்க்கும், மூத்தவர் இ) நாறுவ, செல்லும்

பகுதி - II (மதிப்பெண்கள் : 18)

பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க: 4 x 2 = 8

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க:
அ) இந்தியாவின் முதல் பெண் ஆசிரியர் சாவித்திரிபாய் பூலே.
ஆ) பெண் முன்னேற்றத்தின் தடைக்கல்லாய் இருப்பது குழந்தைத் திருமணம்

17. கூட்டுப்புழுவை எடுத்துக்காட்டிக் கவிஞர் வைரமுத்து உணர்த்தும் கருத்துக்களை எழுதுக.

18. இணைய வழியில் இயங்கும் மின்னணு இயந்திரங்கள் எவையேனும் ஐந்தினைக் குறிப்பிடுக.

19. தொல்காப்பியர் குறிப்பிடும் மூவறிவு, நான்கறிவு, ஐந்தறிவு உயிர்கள் யாவை?

20. சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?

21. தலைவியின் பேச்சில் வெளிப்படுகின்ற பாடுபொருள் யாது?

பிரிவு - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க: 5 x 2 = 10

22. ஒரு சொல்லால் தொடரின் இரு இடங்களை நிரப்புக:
(அகல், அலை)
அ) எண்ணெய் ஊற்றி ________ விளக்கு ஏற்றியவுடன், இடத்தை விட்டு ________.
அ) கைப்பொருளைக் கடல் ________யில் தொலைத்து விட்டு கரையில் தேடி ________ந்தால் கிடைக்குமா?

23. ஒரு தொடரில் இரு வினைகளை அமைத்து எழுதுக: சேர்ந்து - சேர்த்து

24. கலைச்சொற்கள் தருக: அ) Download ஆ) Sentence

25. பிழை நீக்கி எழுதுக:
அ) மதீனா சிறந்த இசை வல்லுநர் வேண்டும் அ) நல்ல தமிழுக்கு எழுதுவோம்

26. வல்லினம் மிகா இடங்களுக்கு இரண்டு விதிகளைச் சான்றுடன் எழுதுக.

27. இடைச்சொற்களைக் கொண்டு தொடர்களை இணைக்க:
அ) பெரும் மழை பெய்தது. வெள்ளம் கரை புரண்டு ஓடியது
ஆ) அலுவலர் வந்தார்; அனைவரும் பதற்றம் அடைந்தனர்.

28. பொருத்துங்கள் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

பகுதி - III (மதிப்பெண்கள் : 18)

பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க: 2 x 3 = 6

29. பள்ளி மாணவர்களுக்கான தமிழக அரசின் இணையவழிச் சேவைகளை எழுதுக.

30. மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனைகளைக் குறிப்பிடுக.

31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக:

கையிலுள்ள செல்வத்தைக் காட்டிலும் நிலைத்த புகழுடைய கல்விதான ஒருவருக்கு வாழ்வின் இறுதி வரையிலும் கைகொடுக்கிறது. கல்வி பெறுதலே பெண்களுக்கு அழகு. சங்க காலத்தில் உயர்ந்திருந்த பெண் கல்வி, இடைக்காலத்தில் ஒடுங்கிப் போனது. பெண் கல்வியை மீட்டெடுக்க உலகம் முழுவதும் சான்றோர் பலர் பாடுபட்டிருக்கின்றனர்.

அ) ஒருவருக்கு வாழ்வின் இறுதி வரை கைகொடுப்பது எது? ஆ) பெண்களுக்கு அழகு எது?
இ) இவ்வுரைப் பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



பிரிவு - 2

எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க: 2 x 3 = 6

*(34 ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)*

32. அறிவையும் உயிரினங்களையும் தொல்காப்பியர் எவ்வாறு தொடர்புபடுத்துகிறார்?
33. சமைப்பது தாழ்வா? இன்பம்
    சமைக்கின்றார் சமையல் செய்வார்.
    அ) இன்பம் சமைப்பவர் யார்? அ) பாவேந்தரின் கூற்றுப்படி சமைப்பது தாழ்வா?
34. "அறிவியல் என்னும் வாகனம்" எனத் தொடங்கும் ஓ, என் சமகாலத் தோழர்களே! பாடல் *(அல்லது)*
    "ஒன்றறி வதுவே" - எனத் தொடங்கும் உயிர்வகை பாடல்.

பிரிவு - 3

எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க: 2 x 3 = 6

35. வல்லினம் இட்டும் நீக்கியும் எழுதுவதன் இன்றியமையாமையை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
36. இடைச்சொற்களின் வகைகள் நான்கினைச் சான்றுகளுடன் எழுதுக.
37. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
    தகுதியான் வென்று விடல் - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:** 5 x 5 = 25

38. அ) அறிவியல் துறையில் தமிழர்கள் எவ்வாறு சிறந்து விளங்க வேண்டுமென்று கவிஞர் வைரமுத்து விவரிக்கிறார். *(அல்லது)*
    ஆ) குடும்ப விளக்கு நூலில் தலைவி பேச்சில் வெளிப்படும் பெண் கல்விக்கான கருத்துக்களை இன்றைய சூழலுடன் ஒப்பிட்டு எழுதுக.
39. அ) உங்கள் தெருவில் மின்விளக்கு வசதி வேண்டி மின்வாரிய அலுவலருக்கு கடிதம் எழுதுக.
    *(அல்லது)*
    ஆ) உங்கள் பள்ளி நூலகத்திற்கு தமிழ்-தமிழ்-ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப்படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.
40. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக:



41. விளம்பரத்தைச் செய்தித்தாள் செய்தியாக மாற்றி அமைக்க:

| | |
|---|---|
| புத்தகம் படிப்போம்! | புதியன அறிவோம்! |

<u>புத்தகத் திருவிழா</u>

நாள் - செப்டம்பர் 19 முதல் 28 வரை

இடம் - சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்

நேரம் - காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை

(முதல் நாள் காலை 9 மணிக்குத் தமிழகக் கல்வி அமைச்சர் தொடங்கி வைக்கிறார்)

(நாள்தோறும் மாலை 6 மணிக்குப் புதிய புத்தகங்கள் வெளியீடும் சிறப்புப் பேச்சாளர்களின் உரையும் இடம்பெறும்)

அனைவரும் வாரீர்! அறிவுத்திறம் பெறுவீர்

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



42. அ) பொருத்தமாக இணைத்து எழுதுக:

| | | |
|---|---|---|
| அவன் | தான்<br>உம் | மனிதன் |
| இயற்கை | ஏ<br>ஆ | அழகு |

1. ______________________
2. ______________________
3. ______________________
4. ______________________
5. ______________________

*(அல்லது)*

ஆ) மொழிபெயர்க்க:

Akbar said, "How many crows are there in this city?" Without even a moment's thought, Birbal replied "There are fifty thousand five hundred and eighty nine crows, my lord". "How can you be so sure?" asked Akbar.

Birbal siad, "Make your men count, My lord. If you find more crows it means some have come to visit their relatives here. If you find less number of crows it means some have gone to visit their relatives elswhere". Akbar was pleased very much by Birbal's wit.

## பகுதி - V (மதிப்பெண்கள் : 24)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:** 3 x 8 = 24

43. அ) அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணையவழிச் சேவைகள் பற்றி விரிவாகத் தொகுத்து எழுதுக.

*(அல்லது)*

ஆ) நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க.

44. அ) இந்திய விண்வெளித் துறை பற்றிய செய்திகளை விவரிக்க

*(அல்லது)*

ஆ) நூலகம், நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?

45. குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக:

அ) முன்னுரை - கணினி - கணினியின் வரலாறு - கணினியின் தோற்றமும் வளர்ச்சியும் - கணினியின் வகைகள் - இணையம் - கணினிவழிக் கல்வி - கணினியின் பயன்கள் - முடிவுரை

*(அல்லது)*

ஆ) முன்னுரை - பெண் கல்வியின் அவசியம் - பண்டைத் தமிழகத்தில் பெண் கல்வி - பெண் கல்வியின் பயன்கள் - கல்வியால் சாதித்த பெண்கள் - பெண் கல்வியின் முக்கியத்துவம் - முடிவுரை.

******

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593